## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

| 2025–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13–ம் நாள் புதன்கிழமை பிரதிவாதி தரப்பு 1–ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண்.44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு. சிவா என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்படுகிறது. | | | |
|---|---|---|---|
| பெயர்: | **செல்வி** | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**13.08.2025** **OS.7/2023** **பி.வா.சா.1 ஆஜர்**

**<u>சாட்சி மனுவின் பெயரில் கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி திரும்ப அழைக்கப்பட்டு முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கின் பிரதிவாதி ஆவேன். எனது தரப்பில் கூடுதல் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து பின்பு அதில் நான் கையொப்பம் செய்தேன். கூடுதல் பிரமான வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்து கொள்ள வேண்டுகிறேன்.

கடந்த 17.05.2025ம் தேதியிட்ட மாவட்ட வருவாய் அலுவலரின் செயல் ஆணைகள் அசல் தாக்கல் செய்கிறேன். **<u>அது பி.வா.சா.ஆ.27 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>** கடந்த 16.06.2025ம் தேதியிட்ட தாவா 2 இலக்க சொத்துக்கான தற்போதைய கணினி பட்டா எண்ணிக்கை–2 இணையவழி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். **<u>அது பி.வா.சா.ஆ.28 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>** கடந்த 16.06.2025ம் தேதியிட்ட 1434 பசலிக்கு தாவா 2 இலக்க சொத்திற்கு என் பெயரில் செலுத்திய நிலவரி ரசீது அசல் தாக்கல் செய்கிறேன். **<u>அது பி.வா.சா.ஆ.29 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>** வாதி தரப்பு பிராதை தள்ளுபடி செய்ய வேண்டி பிரார்த்திக்கிறேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது. )

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam